**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224826

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 21.01.2022

Accepted: 15.03.2022

Published: 01.04.2022

Citation:
Zunoomy, MS, et al. "Influence of South Indian Cinema among the Undergraduates: Special Reference to Sri Lankan State Universities." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 4, 2022, pp. 70–82.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4826

*Corresponding Author:
zunoomy@seu.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Influence of South Indian Cinema among the Undergraduates: Special Reference to Sri Lankan State Universities

**M.S. Zunoomy**
*Temporary Assistant Lecturer, Department of Arabic Language*
*South Eastern University of Sri Lanka*
*https://orcid.org/0000-0003-4285-5288*

**M.A.F. Ashfa**
*Undergraduate, Department of Islamic Studies*
*South Eastern University of Sri Lanka*

**M.R.F. Ahana**
*Temporary Assistant Lecturer, Department of Arabic Language*
*South Eastern University of Sri Lanka*

**Abstract -** From that day till today, cinema has been attracting people. But the days when people waited in cinemas have changed and the time has come to watch movies at home. It also poses a great challenge to today's burgeoning youth society. As such, the study is primarily aimed at identifying the impacts among South Indian Cinema University students. This study uses the characteristic descriptive analysis methodology. The quiz for obtaining the first level data was completed by 124 graduates from the Government University of Sri Lanka and the data was obtained from previous research articles, journals and web articles for the secondary level data. The data obtained are MS. Have been analyzed using Excel software. The main findings of the study are that films contribute in part to the social discipline, knowledge development, political, social and crime discourse of university students, and in part to social cohesion The study also finds that negative comments such as inciting crime, disrupting self-esteem, and leading to family problems and divisions were also mentioned. The study also found that movies are a partial barrier for university students to be careless in university subjects so that university students can go to lectures to get better directories in university exams.

**Key Words:** South Indian Cinema, University Students, Influence, Movie

**References**

1. Chandra, Geetanjali & Bhatia, Sudha. (2009). Social Impact of Indian Cinema – An Odyssey from Reel to Real. Global Media Journal (Arabian Edition).
2. Hahm, Jeeyeon. (2004). Assessing the Impact of Movies upon an Individual's Image Formation Concerning a Given Destination. Florida: University Of Central Florida Orlando.
3. Hall, Amy Claire. (2002).The Effect of Contemporary Cinema on American Society. Covenant College: Sociology Department.
4. Nascimento, Jonas do. (2019). Art, Cinema and Society: Sociological Perspectives. Global Journal of Human-Social Science: C, Volume 19 Issue 5 Version 1.0 Year 2019. Global Journals, ISSN: 2249-460x & Print ISSN: 0975-587X.

5. Mabelle, Fernando. (2016).Impact Assessment of Western Films on Teenagers and the Question of Cultural Promotion in African Society. European Centre for Research Training and Development UK: International Journal of International Relations, Media and Mass Communication Studies Vol.2, No.3, pp.21-33, October 2016.
6. Mahmood, Istiak. (2013).Influence and Importance of Cinema on the Lifestyle of Educated Youth: A study on University Students of Bangladesh. IOSR Journal of Humanities and Social Science (IOSR-JHSS) Volume 17, Issue 6 (Nov. - Dec. 2013), PP 77-80 e-ISSN: 2279-0837, p77-80, ISSN: 2279-0845.
7. Minsara, JF. & Mazahir, SMM. (2015). Impacts Caused by South Indian Cinema among Muslim Children: A Research based on Elamalpothe Area. South Eastern University of Sri Lanka: Second International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language.
8. Patti M. Valkenburg & Jessica Taylor Piotrowski. (2017).How Media Attract and Affect Youth. Yale University Press: New Haven and London.
9. Smithikrai, Chuchai & Longthong, Nathawat & Peijsel, Chatwiboon. (2015). Effect of Using Movies to Enhance Personal Responsibility of University Students. Asian Social Science. 11(5). 10.5539/ass.v11n5p1.
10. Su'aib, K.S.M. (2013). Need of Cinema: a review. Retrieved from: http//:www.kayalpatnam/ columns.asp?id=11.
11. Tom, Eileen W. (2014). Social Constructs in Film Culture: The Effect of it on the Performing Arts, and the Destroyed Association of Signs to Enhance Meaning. University Honors Theses. Portland State University. Paper 71. https://doi.org/10.15760/honors.53

# தென்னிந்தியத் திரைப்படம் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கு: இலங்கைப் பல்கலைக்கழகங்களை மையப்படுத்திய ஆய்வு

*எம். எஸ். ஜூனாமி*
உதவி விரிவுரையாளர், அரபிமொழிதுறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா

*எம். ஏ. எப். அஸ்ஹபா*
இஸ்லாமியக் கல்வித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா

*எம். ஆர். எப். அஹானா*
உதவி விரிவுரையாளர், அரபிமொழிதுறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா

**ஆய்வுச்சுருக்கம்**

*அன்று முதல் இன்றுவரை திரைப்படம் மக்களை கவர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அரங்குகளில் மக்கள் காத்துக்கிடந்த காலம் மாறி, வீடுகளிலேயே திரைப்படம் பார்க்கும் காலம் வந்துவிட்டது. இது வளர்ந்து வரும் இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு பெரும் சவாலாகவும் அமைந்துள்ளது. அந்த வகையில், தென்னிந்தியத் திரைப்படம் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை கண்டறியும் முதன்மை நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியிலான விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. முதலாம் நிலைத்தரவுகளைப் பெறுவதற்கான வினாக்கொத்தினை இலங்கை அரச பல்கலைக்கழக மாணவர்களைச் சேர்ந்த 124 பட்டதாரிகள் பூரணப்படுத்தியிருந்ததுடன், இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக முன்னைய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் ஆகியவற்றின் மூலமும் தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் எம்.எஸ். எக்ஸல் மென்பொருளை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகத் திரைப்படங்கள் பல்கலைக்கழக மாணவர்களின் சமூக ஒழுக்கத்திற்கும், அறிவை விருத்தி செய்வதற்கும், அரசியல், சமூக, குற்றங்களை மக்களுக்கு எடுத்து சொல்வதற்கும், சமூக ஐக்கியத்திற்கும் பகுதியளவில் பங்களிப்பு செய்யும் அதேநேரம் திரைப்படங்கள் குற்றச்செயல்களை ஊக்குவித்தல், சுய வாழ்வமைப்பை சீர்குலைத்தல், குடும்பப் பிரச்சினைகளுக்கு பிளவுகளுக்கு வழிவகுத்தல் போன்ற எதிர்மறையான கருத்துக்களையும் குறிப்பிட்டிருந்ததை இவ்வாய்வினூடாக கண்டறிய முடிகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகப் பரீட்சைகளில் சிறந்த அடைவுகளை பெறுவதற்கு விரிவுரை செல்வதற்கு பல்கலைக்கழக பாடங்களில் கவனக்குறைவாக இருப்பதற்கு திரைப்படங்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பகுதியளவில் தடையாக இருப்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *தென்னிந்தியத் திரைப்படம், பல்கலைக்கழக மாணவர்கள், செல்வாக்கு, திரைப்படம்*

## ஆய்வுப் பின்னணி

இன்று திரைப்படம் காற்று வெளியெங்கும் பரவி, தனது இருப்பைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. திரைப்படத்திலிருந்து இன்று ஒருவன் அவன் விடுபட்டாலும் கூட- விலகி இருக்க முடியாது. வீட்டினுள்ளே இடம் பிடித்துள்ள தொலைக்காட்சி, இரண்டு இன்ச் அளவேயான செல்போன் குட்டித் திரை இவைகளிலிருந்து தப்பித்து வருவது என்பது ஒருவனுக்குச் சாத்தியமே இல்லை. இவற்றிலிருந்து அதிஷ்டவசமாக ஒருவன் தப்பினாலும், பேருந்து பயணங்களின்போது திரைப்படத்தை ஒருவன் சந்தித்தே தீர வேண்டும். கண்ணையும் காதையும் மூடினால் மட்டுமே இன்று ஒருவன் திரைப்படத் தாக்கத்திலிருந்து தப்பிப் பிழைக்கலாம் எனுமளவுக்கு உலகளவில் அதிக தாக்கத்தை திரைப்படம் செலுத்தியுள்ளது. இதனால் சினிமாவின் இன்றியாமையாத்தன்மையை இன்று எவருமே கேள்விக்கு உட்படுத்து வதில்லை. நல்ல சினிமா, கெட்ட சினிமா, பொழுதுபோக்கு சினிமா, சீரியல் சினிமா என வகைப்படுத்தலாமேயன்றி சினிமா என்ற ஒன்றின் இருப்பை இன்று எவரும் மறுக்க முடியாது (ஷுஐப், 2013).

சமூக மட்டத்தில் அதிகம் தாக்கம் செலுத்தியுள்ள இந்தியத் திரைப்படம் உருவாகி 2013ம் ஆண்டு நூற்றாண்டு விழா சென்னையில் கொண்டாடப்பட்டது. தென்னிந்தியத் திரைப்படம் சக்தி வாய்ந்த சாதனமாக உலகம் முழுவதும் வளர்ச்சி பெற்றுள்ளது. இவை மக்களின் மனப்பாங்கையும் கருத்துக்களையும் மாற்றியமைப்பவைகளாக உள்ளன. குறிப்பாக மனிதனது அறிவு, ஆளுமை, ஆன்மீகம், ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது (மின்ஸாரா மற்றும் மஸாஹிர், 2015).

இன்று மனிதர்கள் நாகரிகம் என்ற போர்வையில் அநாகரிகத்தை பின்பற்றுகின்றனர் (மின்ஸாரா மற்றும் மஸாஹிர், 2015). குறிப்பாக, பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களிடத்தில் தென்னிந்தியத் திரைப்படம் பாரிய அளவிலான தாக்கங்களை செலுத்தியுள்ளது. தொலைக்காட்சிகள் தாண்டி ஸ்மார்ட் கைப்பேசியில் அதிகரித்த பாவனையினால் திரைப்படங்களைப் பெறுவதும், பார்ப்பதும் இலகுவான விடயமாக மாறியுள்ளன. இதனால் அவர்கள் தங்கள் உயர்கல்வியில் போதிய தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கல்வி விடயத்தில் கரிசனை கொள்வது வெகுவாகக் குறைந்துள்ளன. மேலும் அவர்களின் நடத்தைகளிலும், ஆடை அணியும் முறைகளிலும் தென்னிந்தியத் திரைப்படத்தின் கதாபாத்திரங்களின் சாயல்களை காண முடிகின்றது. இவ்வாய்வு இடைவெளியை முன்னிறுத்திப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தென்னிந்தியத் திரைப்படம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை அறிய மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

தென்னிந்தியத் திரைப்படம் பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. குறிப்பாக அவர்களின் கல்வி செயற்பாடுகளில், சமூக உறவில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் திரைப்படங்கள் ஒவ்வொருவரது வாழ்விலும் பல்வேறு தாக்கத்தைச் செலுத்தி வருவதைப் பல ஆய்வுகளின் முடிவாகவும் காண முடிகின்றது. அந்தவகையில் திரைப்படங்கள் பார்ப்பது பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்விலும்; கற்றல் விடயத்திலும் எவ்வகையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கங்கள்

பல்கலைக்கழக மாணவர்கள் தென்னிந்திய திரைப்படம் தொடர்பான கருத்துநிலையை கண்டறிதல். திரைப்படங்கள் பார்ப்பதால் பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்விலும்

கற்றல் விடயங்களிலும் தாக்கங்கள் ஏற்படுகின்றனவா எனக் கண்டறிதல்.

## முன்னைய ஆய்வுகள்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட இரண்டாம் சர்வதேச ஆய்வரங்கிற்கு ஜே.எப். மின்ஸாரா மற்றும் எஸ்.எம்.எம். மஸாஹிர் (2015) ஆகியோரினால் சமர்ப்பிக்கப்பட்ட 'தென்னிந்திய சினிமாக்கள் முஸ்லிம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்: எலமல்பொத பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு' எனும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையானது, முஸ்லிம் சமூகத்தில் தென்னிந்தியத் திரைப்படங்கள் எந்தளவு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை ஆராய்கின்றது. குறிப்பாக, ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் சிறார்களில் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன. சிறார்களின் அனைத்து விடயங்களிலும் திரைப்படத் தாக்கம் செலுத்தியதன் விளைவாக, அவர்கள் திரைப்படம் எனும் மாபெரும் சக்தியின் முன்பாக செயலிழந்து நிற்பதாகவும், அவர்கள் பல்லினக் கலாசார சூழலில் வாழ்வதால் தென்னிந்தியத் திரைப்படங்கள் தாக்கம் அதிகளவில் இருப்பதாகவும் இவ்வாய்வு கூறுகின்றது. சிறார்களின் பண்பாடு, கலாசாரம், மொழி, நடை, உடை, பாவனை, உளவியல், கல்வி போன்ற பல்வேறு விடயங்களில் அவை தாக்கம் செலுத்துவதாக இவ்வாய்வு முன்மொழிகின்றது.

கே.எஸ்.எம். ஷுஐப் என்பவரால் 'சினிமா தேவை: ஒரு மறுபரிசீலனை' (2013) எனும் தலைப்பில் எழுதப்பட்ட இணையக் கட்டுரையானது இந்திய சினிமாவின் வரலாற்றையும் இன்றளவில் அதன் தாக்கம் உலக மட்டத்தில் எந்தளவு காணப்படுகின்றது என்பதையும் விபரிக்கின்றது. அதனைத் தொடர்ந்து, திரைப்படம் தொடர்பான முஸ்லிம்களின் நிலைப்பாடு எவ்வாறு அமைந்திருந்தது, திரைப்படத்தை எவ்வாறு நோக்க வேண்டும் என்பவற்றையும் இக்கட்டுரை பேசுகின்றது. குறிப்பாக, முஸ்லிம் சமூக மட்டத்தில் சினிமா ஏற்படுத்தியுள்ள தாக்கம், முஸ்லிம்கள் சினிமாவை நோக்க வேண்டிய முறை போன்றவற்றையும் விபரிக்கின்றது.

இஸ்தியாக் மஹ்மூத் என்பவரால் 'கல்வியறிவுள்ள இளைஞர்களின் வாழ்க்கை முறையில் சினிமாவின் தாக்கமும் அதன் முக்கியத்துவமும்: பங்களாதேஷ் பல்கலைக்கழக மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு' (2013) எனும் ஆய்வானது, திரைப்படம் தற்போதைய உலகில் சக்தி வாய்ந்ததொரு கலையாக திரைப்படத்தை அடையாளப்படுத்துகின்றது. இச்சினிமாவானது சமூகத்தையும் கலாச்சாரத்தையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது. திரைப்படத்தைப் பெறுவதற்கு இன்றைய தொழிநுட்பம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பெரிதும் உதவுவதாக அமைகின்றது. இந்தவகையில், திரைப்படம் அவர்களின் வாழ்க்கை முறை, உளப்பாங்கு, நடத்தை போன்றவற்றில் சொல்லத்தக்க தாக்கம் செய்வதாக இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

கீதாஞ்சலி சன்ட்ரா மற்றும் சுபா பரியா ஆகியோரால் 'இந்திய சினிமாவின் சமூகத் தாக்கம்' எனும் தலைப்பிலான ஆய்வானது, பொழுதுபோக்கான அமைப்பில் மாத்திரம் அமையாமல் சமூகப் பொறுப்பு சார்ந்த திரைப்படங்களை இந்தியா வழங்கி வருவதால் சமூகத்தல் வலுவான தாக்கத்தை செலுத்தி வருவதாக முன்மொழிகின்றது. யதார்த்தத் திரைப்படம் மூலம் ஆர்வலர்களில் அது ஏற்படுத்தும் முழுமையான தாக்கங்களை ஆராய்வதாக அமைகின்றது.

## ஆய்வு முறையியல்


இவ்வாய்வு பண்புரீதியிலான விபரிப்பு முறையில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக

மாணவர்கள் 124 பேரிடம் வினாக்கொத்து மூலம் முதல் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக முன்னைய ஆய்வுகள், நூற்கள், இணையக் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக எம்.எஸ்.எக்ஸல் மென்பொருள் உபயோகிக்கப்பட்டுள்ளது.

### கண்டுபிடிப்புகளும் கலந்துரையாடலும்

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தென்னிந்திய திரைப்படங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை அறியும் நோக்கில் இவ்வாய்வின் வினாக்கொத்தினை தென்கிழக்கு பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்தை சேர்ந்த 124 பேர் பூரணப்படுத்தியிருந்தனர். அவற்றில் 95 (76.6%) பெண்களும் 29 (23.4%) ஆண்களும் பூரணப்படுத்தியிருந்தனர் அவற்றில் முதலாம் வருடத்தை சேர்ந்தவர்கள் 40 பேரும் இரண்டாம் வருடத்தை சேர்ந்தவர்கள் 28 பேரும் மூன்றாம் வருடத்தை சேர்ந்தவர்கள் 47 பேரும் நான்காம் வருடத்தை சேர்ந்த 9 பேரும் பூரணப்படுத்தியிருந்தனர்.


பல்கலைக்கழக மாணவர்கள் என்ற ரீதியில் அவர்கள் கல்விசார் மற்றும் கல்வி சாரா விடயங்களில் பங்குபற்றி ஆர்வமாக செயற்பட்டு வருகின்றனர். அந்தவகையில் அவர்களிடம் ஓய்வுநேரங்களில் எவற்றில் அதிக ஆர்வம் காட்டுகின்றீர்கள் என அவர்களிடம் வினவப்பட்ட போது, 82 ஆனவர்கள் சமூக வலைத்தளங்களில் ஆர்வம் காட்டுவதாகவும் 19 ஆனவர்கள் கல்வி விடயங்களில் ஈடுபாடு காட்டுவதாகவும் புத்தகம் வாசிப்பதாக 14 ஆனவர்களும் சினிமா பார்ப்பதில் 5 ஆனவர்களும் ஏனையவர்கள் (4) பிற செயற்பாடுகளிலும் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டனர். அதனை பின்வரும் வரைபு 1 காட்டுகிறது.




**வரைபு 1: ஓய்வுநேர ஈடுபாடு**


சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை இன்றைய காலகட்டத்தில் திரைப்படம் பார்ப்பதில் எவரும் விதிவிலக்காகிவிடவில்லை. அந்தவகையில் ஆய்வுக்குட்படுத்தியவர்களிடம் நீங்கள் திரைப்படம் பார்க்கின்றீர்களா என வினவிய போது 87% ஆனவர்கள் ஆம் என்றும் 13% ஆனவர்கள் இல்லை என்றும் பதிலளித்திருந்ததுடன், அவர்களில் பெரும்பாலானோர் அதாவது 74% ஆனோர் எப்போதாவது தான் திரைப்படம் பார்ப்பதாகவும் 7% ஆனோர் வாரமொருமுறை பார்ப்பதாகவும் அடிக்கடி பார்ப்பதாக 7% ஆனோரும் தினமும் பார்ப்பதாக 6% ஆனோர்களும் பார்ப்பதேயில்லை என 6% ஆனோர்களும் குறிப்பிட்டிருந்தனர்.

தொழில்நுட்ப வசதி நிறைந்த இன்றைய நவீனயுகத்தில் பல்வேறு மின்னியல் ஊடகங்கள் மூலம் திரைப்படங்கள் பார்க்க முடிகிறது. எனவே, ஆய்வுக்குட்படுத்தியவர்களிடம் அதிகமாக எதனூடாக திரைப்படங்கள் பார்க்கின்றீர்கள் என வினாக்கொத்தின் மூலம் வினவியபோது அதிகபட்சமானோர் 60% ஆனவர்கள் கைத்தொலைப்பேசி மூலம் பார்ப்பதாகவும் 29% ஆனவர்கள் தொலைக்காட்சி மூலம் பார்ப்பதாகவும் 6% ஆனவர்கள் மடிக்கணினி அல்லது கணினி மூலம் பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்ததுடன் ஓரிருவரே திரையரங்குகளில் திரைப்படம் பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர். அதனை பின்வரும் வரைபு 2 காட்டுகிறது.





**வரைபு 2: திரைப்படம் பார்க்கும் விதம்**

அவ்வாறு மேற்குறிப்பிட்ட ஊடகங்களைக் கொண்டு திரைப்படம் பார்ப்பவர்களில் பெரும்பாலானோர் அதாவது 48% தனியாகவே திரைப்படம் பார்ப்பதாகவும் 32% நண்பர்களுடனும் 20% குடும்ப உறுப்பினர்களுடனும் பார்ப்பதாக வினாக்கொத்தின் மூலம் கண்டறியப்பட்டது. அத்துடன் அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் திரைப்படங்களைப் பெறும் முறைகளில் 49% ஆனோர்கள் தரவிறக்கம் செய்தும், 21% ஆனோர்கள் நண்பர்களிடமிருந்து பெற்றுப் பார்ப்பதாகவும் ஏனையவர்கள் சீ.டி வாங்கி, யூட்டியூபில் ஆன்லைன் மூலம், முகப்புத்தகம் (Facebook) மூலம் பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர். அதனை பின்வரும் வரைபு 3 காட்டுகிறது.




**வரைபு 3: திரைப்படம் பெறும் முறை**


தரவிறக்கம் செய்பவர்களிடம் எவ்வாறு தரவிறக்கம் செய்கிறீர்கள் என வினவிய போது 59% ஆனவர்கள் Data Card வாங்கி அதன் மூலம் தரவிறக்கம் செய்வதாகவும், 16% ஆனவர்கள் பல்கலைக்கழக இலவச Wi&Fiஐ பயன்படுத்தி தரவிறக்கம் செய்வதாகவும் குறிப்பிட்டதுடன் ஏனையோர் Home Router/ Wi&Fi மூலம் பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர். இவ்வாறு பலவிதங்களில் பலவாறு திரைப்படம் பார்ப்பது பற்றி வினாக்கொத்தின் மூலம் அறிந்து கொண்டதைத் தொடர்ந்து திரைப்படம் பார்க்கும் நாட்கள் தொடர்பாகவும் வினாக்கொத்தின் மூலம் அறியப்பட்டது. அதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரை இல்லாத நாட்களிலே அதிகமாகத் திரைப்படம் பார்ப்பவர்கள் 73% ஆனவர்கள் என கண்டறியப்பட்டது. இருப்பினும் விரிவுரை நாட்களில் இரவுவேளையில் திரைப்படம் பார்ப்பதாகவும் 14% ஆனவர்கள் குறிப்பிட்டிருந்ததுடன் விரிவுரை நாட்களில் மாலையிலும் 3% ஆனவர்கள் திரைப்படம் பார்ப்பதாகக் குறிப்பிட்டனர். ஏனைய 10% ஆனவர்கள் குறிப்பிட்ட நேரமின்றி கிடைக்கும் நேரம் மாத்திரம் பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர். இதனைக் கீழுள்ள வரைபு 4 மூலம் நோக்கலாம்.




**வரைபு 4: திரைப்படம் பார்க்கும் நாட்கள்**


ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் வாரத்திற்கு ஒரு திரைப்படம் மட்டு பார்ப்பதாகவும் ஒரு சிலர் இரண்டு அல்லது மூன்று திரைப்படங்களும் ஓரிருவர் நான்கு அல்லது ஐந்து திரைப்படங்கள் பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர். அவ்வாறு பார்க்கப்படும் திரைப்படங்களில் பெரும்பாலானோர் அதிகமாக பார்ப்பது அதாவது 40.3% ஆனோர்கள் நகைச்சுவை படங்கள் பார்ப்பதாகவும் 20% ஆனோர்கள் திரில்லர் (Thriller) படங்களும் 7% ஆனோர்கள் ஆக்ஷன் (Action) படங்களும் 5% ஆனோர்கள் ஹொரார் (Horror) படங்களும் 6% ஆனோர்கள் Science& fiction படங்களும் 2% ஆனோர்கள் காதல் படங்களும் 1% ஆனோர்கள்

எட்வன்சர் (Adventure) படங்களும் 2% ஆனோர்கள் டொக்கியூமன்டரி (Documentary) படங்கள் பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர். இதனைப் பின்வரும் வரைபு 5 காட்டுகிறது.





**வரைபு 5: பார்க்கும் திரைப்படம்**

அவற்றின் அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்களிடையே திரைப்படங்கள் தொடர்பாக அவர்களது நிலைப்பாடுகள் வினாக்கொத்தின் மூலம் கண்டறியப்பட்டன. அந்தவகையில் திரைப்படங்கள் பற்றிய நேர்மறையான கருத்துக்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களிடம் கேட்டறியப்பட்டு அவர்களது அபிப்பிராயங்கள் கண்டறியப்பட்டன. சமூக ஒழுக்கம் என்பது சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருடைய வாழ்வையும் சீர்மைப்படுத்துகிறது. அதற்கான பங்களிப்பையும் சமூகத்தில் பல்வேறு துறைகளும் ஆற்றிவருகின்றன. எனவே, திரைப்படங்களும் அச்சமூக ஒழுக்கத்திற்கான பங்களிப்பினை வழங்குகின்றனவா? என்ற வினாவிற்கு நடுநிலைமையான பங்களிப்பினை வழங்குகின்றது என 61% ஆனவர்களும் சமூக ஒழுக்கத்திற்கு பங்களிப்பு வழங்குவதில்லை என 15% உம், அறவே இல்லை என 10% உம், சமூக ஒழுக்கத் திற்கு அதிகமாகவும், மிக அதிகமாகவும் பங்களிப்பு வழங்குகின்றன என முறையே 6% உம், 8% உம் குறிப்பிட்டனர். அதனைக் கீழ்வரும் வரைபு 6 மூலம் நோக்கலாம்.




**வரைபு 6: திரைப்படத்தின் சமூக ஒழுக்க பங்களிப்பு**


அடுத்து, திரைப்படமொன்றில் பல விடயங்கள் ஒரு சில குறிப்பிட்ட மணிநேரத்தில் எடுத்துக்காட்டப்படுகின்றன. அவை சாதக மற்றும் பாதக விடயங்களாகவும் இருக்கலாம். ஆயினும், திரைப்படங்கள் அறிவை விருத்தி செய்வதில் துணைபுரிகின்றனவா என வினாக்கொத்தின் மூலம் கேட்டறிந்த போது நடுநிலைமையாக என 70% பெரும்பாலானோரும் இல்லை என 12% ஆனவர்களும் அதிகம் என 11% ஆனவர்களும் அறவே இல்லை என 5% ஆனவர்களும் மிகவும் சொற்பமான வீதத்தினரே 2% மிக அதிகம் எனவும் குறிப்பிட்டிருந்தனர். இதனை வரைபு 7 காட்டுகிறது.




**வரைபு 7: அறிவு விருத்தி**


தொழில்நுட்ப வசதி நிறைந்த இக்கால கட்டத்தில் அரசியல், சமூகக் குற்றங்களை உடனுக்குடன் வெளிக்கொண்டுவந்து மக்களுக்கு எடுத்துவைப்பதில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் திரைப்படங்களானவை அரசியல், சமூக குற்றங்களை மக்களுக்கு எடுத்து வைப்பதில் பங்களிப்பு செய்வது தொடர்பாக

வினாக்கொத்தின் மூலம் பல்கலைக்கழக மாணவர்களிடம் கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்ட போது, அதிகம் என 42% ஆனவர்களும் நடுநிலைமை என 37% ஆனவர்களும் மிக அதிகம் என 17% ஆனவர்களும் இல்லை என 4% ஆனவர்களும் குறிப்பிட்டிருந்தனர். இதனை வரைபு 8 விபரிக்கின்றது.





**வரைபு 8: சமூக குற்றங்களை விழிப்பூட்டல்**

அடுத்தகட்டமாக, திரைப்படங்கள் குறித்து எதிர்மறையான கருத்துக்களும் கேட்டறியப்பட்டு அவர்களது அபிப்பிராயங்கள் கண்டறியப்பட்டன. அதனடிப்படையில், கீழ்வரும் வரைபு 9 ஆனது திரைப்படங்கள் குற்றச்செயல்களை ஊக்குவிக்கின்றனவா என்ற வினாவினை விளக்கும் முகமாக உள்ளது. அதாவது, திரைப்படங்கள் குற்றச்செயல்களை ஏதோவொரு வகையில் 38% ஆனவர்கள் நடுநிலைமையாக ஊக்குவிக்கின்றன எனவும் 41% ஆனவர்கள் அதிகமாக எனவும் 19% ஆனவர்கள் மிக அதிகமாகவும் திரைப்படங்கள் குற்றச்செயல்களை ஊக்குவிக்கின்றன எனவும் 2% ஆன மிக சொற்பமானவர்களே இல்லை எனவும் பதிலளித்திருந்தனர். இதனைக் கீழுள்ள வரைபு 9 காட்டுகிறது.




**வரைபு 9: குற்றங்களை ஊக்குவித்தல்**


நடிகர், நடிகைகளின் மேலுள்ள பற்றினால் அவர்களது ஆடை அலங்காரம், சிகை அலங்காரம், நடை உடை பாவனை, பழக்கவழக்கங்கள் என்பவற்றை பல்கலைக்கழக மாணவர்களாயிருக்கும் இளைஞர்கள், யுவதிகள் தமது வாழ்க்கையிலும், நடைமுறையிலும் பின்பற்றி அவர்களது சுய வாழ்வமைப்பை இழந்து வருகின்றீர்களா என வினவப்பட்ட போது பெரும்பாலானோர் அதிகமாகவே அவர்களது வாழ்வமைப்பை இழந்து வருவதாக 43% ஆனவர்கள் குறிப்பிட்டனர். அதற்கடுத்தபடியாக மிக அதிகம் என 35% உம், அடுத்து நடுநிலைமை என 18% உம், நடிகை நடிகைகளின் பற்றினால் சுய வாழ்வமைப்பை இழக்கவில்லை என 4% ஆனவர்களே குறிப்பிட்டிருந்தனர். அறவே இல்லை என எவரும் குறிப்பிட்டிருக்கவில்லை. இதனைக் காட்டும் முகமாக வரைபு 10 காணப்படுகிறது.




**வரைபு 10: சுய மதிப்பை இழத்தல்**


தற்காலத்தில் திரைப்படமொன்று ஒரு முக்கியக் கதாபாத்திரத்தைக்கொண்டு குடும்பத்தினை அடிப்படையாக வைத்தே எடுக்கப்படுகிறது. அவை எந்தக் கதைக் கருவினையும் கொண்டதாகவும் இருப்பதை திரைப்படங்கள்மூலம் அவதானிக்கலாம். எனவே, அவை குடும்பப் பிளவுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் வழி வகுக்கின்றன என்பதை நடுநிலைமை என்ற வகையில் 41.1% ஆனவர்கள் ஏற்றுக்கொள்வதாகவும் அதிகம் என்ற வகையில் 29.8% ஆனவர்களும் மிகவும் அதிகம் என்ற வகையில் 21.8% ஆனவர்களும் திரைப்படங்கள் குடும்பப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டனர். அக்கருத்தினை 7.3%

ஆனவர்களே இல்லை என்றனர். அறவே இல்லை என எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கருத்தினை விளக்குவதாக படம் 11 காணப்படுகிறது.





**வரைபு 11: குடும்பப் பிளவு ஏற்படல்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களிடம் உங்களது திறமைகளை மேம்படுத்த திரைப்படங்கள் துணைபுரிகின்றனவா என்ற வினாவிற்கான பதில்கள் பின்வருமாறு அமைந்திருந்தன. 48% ஆனோர் நடுநிலைமை எனவும் 43% ஆனோர் இல்லை எனவும் 4% ஆனோர் அறவே இல்லை எனவும் 5% ஆனோர் அதிகம் எனவும் பதில்கள் காணப்பட்டதுடன் மிக அதிகம் என எவரும் குறிப்பிட்டிருக்கவில்லை. இதனைக் கீழ்வரும் வரைபு 12 காட்டுகிறது.





**வரைபு 12: திறமைகளை மேம்படுத்தல்**

அடுத்த கட்டமாக, தென்னிந்தியத் திரைப்படங்கள் பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் விடயங்களுடன் தொடர்புபடுத்தியதான கேள்விகள் வினாக்கொத்தின் மூலம் வினவப்பட்டு அவர்களது அபிப்பிராயங்கள் கண்டறியப்பட்டடன. அந்தவகையில், திரைப்படம் பார்ப்பது பல்கலைக்கழகக் கற்றல் விடயங்களுக்குத் தடையாக உள்ளதா என வினவப்பட்டபோது, பகுதியளவு உடன்படுவதாக 38% காணப்பட்டனர். தடையாக இருப்பதை உடன்படுவதாக 25% காணப்பட்டனர். முழுமையாக உடன்படுவதாக 17% உடன்படவில்லை என 16% முழுமையாக உடன்படவில்லை என 4% காணப்பட்டனர். இதனைப் பின்வரும் வரைபு 13 காட்டுகிறது.





**வரைபு 13: கற்றலுக்குத் தடை**

திரைப்படங்கள் பார்ப்பதால் விரிவுரைகளுக்கு செல்வதில் அசட்டையாக இருக்கின்றீர்களா என்ற வினாவிற்குத் திரைப்படங்கள் பார்ப்பது விரிவுரைக்குச் செல்வதில் அசட்டையாக இருக்கச் செய்வதில்லை என 41% ஆனவர்களும் முழுமையாக உடன்படவில்லை என 28.2% ஆனவர்களும் உடன்படுகிறேன் என 18.5% ஆனவர்களும் 8.9% ஆனவர்கள் பகுதியளவு உடன்படுகிறேன் எனவும் 3.2% முழுமையாக உடன்படுவதாகவும் குறிப்பிட்டனர். இதனைப் பின்வரும் வரைபு 14 காட்டுகிறது.




**வரைபு 14: விரிவுரைகளுக்குச் செல்வதில் அசட்டை**

பல்கலைக்கழகப் பரீட்சைகளில் சிறந்த அடைவை பெறுவது என்பது சிறந்த பட்டதாரியின் அடையாளமாகும். அந்தவகையில், பரீட்சைகளில் சிறந்த அடைவுகளைப் பெறுவதற்குப் திரைப்படம் பார்க்கும் பழக்கம் தடையாக உள்ளதா என கருத்துகணிப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் பெரும்பாலானோர் 30% ஆனவர்கள் உடன்படவில்லை எனவும், அடுத்தபடியாக 23% ஆனவர்கள் முழுமையாக உடன்படுவதாகவும் 23% ஆனவர்கள் பகுதியளவு உடன்படுவதாகவும் 20% ஆனவர்கள் உடன்படுவதாகவும் 4% ஆனவர்கள் முழுமையாக உடன்படவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். இதனைக் கீழுள்ள வரைபு 15 மூலம் நோக்கலாம்.




**வரைபு 15: சிறந்த பெறுபேறுகளைப் பெறத் தடை**

## முடிவுரை

தென்னிந்தியத் திரைப்படம் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் எனும் இவ் ஆய்வினூடாக திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் காட்டும் பல்கலைக்கழக மாணவர்களில் அதிகமானவர்கள் கைத்தொலைபேசி ஊடாகவே தனியாகவோ அல்லது நண்பர்களுடனோ சேர்ந்தும் பார்ப்பதையே அதிகம் விரும்புவதாகவும் இவ்வாய்வினூடாகக் கண்டறியப்பட்டது. மேலும் திரைப்படங்களை தரவிறக்கம் செய்யும் முறையாக டேட்டா மூலமும் ஏனையவர்கள் பல்கலைக்கழக இலவச Wi-Fi மூலமும் தரவிறக்கம் செய்து பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் திரைப்படங்களை விரிவுரை இல்லாத நாட்களில் பார்ப்பதாகவும் நகைச்சுவை, திரில்லர், ஆக்ஷன், ஹாரர் வகைகளை சார்ந்த திரைப்படங்களையே பார்ப்பதாகவும் இவ்வாய்வினூடாகக் கண்டறிந்தோம். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களிடையே திரைப்படங்கள் அவர்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைக் கண்டறிந்த போது திரைப்படங்கள் சமூக ஒழுக்கத்திற்கும் அறிவை விருத்தி செய்வதற்கும் அரசியல், சமூக, குற்றங்களை மக்களுக்கு எடுத்து சொல்வதற்கும் சமூக ஐக்கியத்திற்கும் அதிகமான பங்களிப்பும் துணையும் புரிகின்றன என இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. திரைப்படங்கள் குற்றச்செயல்களை ஊக்குவித்தல், சுய வாழ்வமைப்பைச் சீர்குலைத்தல், குடும்பப் பிரச்சினைகளுக்குப் பிளவுகளுக்கு வழிவகுத்தல் போன்ற எதிர்மறையான கருத்துக்களையும் குறிப்பிட்டிருந்ததை இவ்வாய்வினூடாகக் கண்டறிய முடிகின்றது.

திரைப்படங்கள் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஏற்படுத்தப்பட்ட நேர்மறை தாக்கங்களை ஏற்படுத்தி இருந்தாலும் திரைப்படங்கள் அவர்களது கற்றல் விடையங்களுக்கு தடையாக இருப்பதாகவும் கண்டறியப்பட்டது. ஆயினும் பல்கலைக்கழக பரீட்சைகளில் சிறந்த அடைவுகளை பெறுவதற்கு விரிவுரை செல்வதற்கு பல்கலைக்கழகப் பாடங்களில் கவனக்குறைவாக திரைப்படங்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பகுதியளவில் தடையாக அமைவதையும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

## பரிந்துரைகள்

பல்கலைக்கழக மாணவர்கள் திரைப்படங்கள் பார்ப்பதால் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படுகின்றன என உணருகின்ற பட்சத்தில் இயலுமானவரை திரைப்படங்கள் பார்ப்பதைக் குறைத்தலும் அச்சமயத்தில்

*தமது ஆளுமைகளை, அறிவை, திறமைகளை விருத்தி செய்கின்ற புத்தகங்கள், ஆய்வுசார் பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள் வாசித்தல், பயனுள்ள காணொளிகள் பார்த்தல்.*

*சிலர் திரைப்படங்கள் பார்ப்பதைவிட்டும் தவிர்க்கமுடியாத மனநிலையில் இருக்கும் பட்சத்தில் அவர்களது வாழ்விற்கு, கற்றலுக்குப் பயன் தரும் திரைப்படங்களை மாத்திரம் பார்க்க முயற்சித்தல்.*

*இயலுமானவரை நேரத்தைத் திரைப்படங்கள் பார்ப்பதில் காலம் கடத்துவதைத் தவிர்த்து விரிவுரை காலங்களில் நூலகங்கள் சென்று பயனுள்ள புத்தகங்கள் வாசித்தல் அல்லது கற்றல் தொடர்பான விடையங்களை நண்பர்களுடன் கலந்துரையாடுதல்.*

**உசாத்துணைகள்**


1. *சந்திரா, கீதாஞ்சலி பாட்டியா, சுதா. (2009). இந்திய சினிமாவின் சமூக தாக்கம் - ரீலில் இருந்து நிஜத்திற்கு ஒரு ஒடிஸி. குளோபல் மீடியா ஜர்னல் (அரேபிய பதிப்பு).*
2. *ஹாம், ஜீயோன். (2004). கொடுக்கப்பட்ட இலக்கைப் பற்றிய ஒரு தனிநபரின் உருவ அமைப்பில் திரைப்படங்களின் தாக்கத்தை மதிப்பிடுதல். புளோரிடா: மத்திய புளோரிடா ஆர்லாண்டோ பல்கலைக்கழகம்.*
3. *ஹால், ஆமிகிளேர்.(2002).அமெரிக்கன் சமூகத்தில் தற்கால சினிமாவின் விளைவு. கோவனன்ட் கல்லூரி: சமூகவியல் துறை.*
4. *நாசிமென்டோ, ஜோனாஸ். (2019) கலை, சினிமா மற்றும் சமூகம்: சமூகவியல் பார்வைகள். குளோபல் ஜர்னல் ஆஃப் ஹ்யூமன்-சோஷியல் சயின்ஸ்: சி, வால்யூம் 19 இதழ் 5 பதிப்பு 1.0 ஆண்டு 2019. குளோபல் ஜர்னல்ஸ், ஐகுகுமீ: 2249-460து கணூடிணஞ ஐகுகுமீ: 0975-587னீ.*
5. *மாபெல்லே, பெர்னாண்டோ. (2016). டீனேஜர்கள் மீதான மேற்கத்திய திரைப்படங்களின் தாக்க மதிப்பீடு மற்றும் ஆப்பிரிக்க சமூகத்தில் கலாச்சார மேம்பாட்டின் கேள்வி. ஆராய்ச்சி பயிற்சி மற்றும் மேம்பாட்டுக்கான ஐரோப்பிய மையம் க்ஓ: சர்வதேச உறவுகள், ஊடகம் மற்றும் மக்கள் தொடர்பு ஆய்வுகளின் சர்வதேச இதழ் தொகுதி.2, எண்.3, பக்.21-33, அக்டோபர் 2016.*
6. *மஹ்மூத், இஸ்தியாக். (2013). படித்த இளைஞர்களின் வாழ்க்கைமுறையில் சினிமாவின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம்: பங்களாதேஷின் பல்கலைக்கழக மாணவர்கள் பற்றிய ஆய்வு.* IOSR *மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல்* (IOSR&JHSS) *தொகுதி 17, வெளியீடு 6 (நவ. - டிசம்பர். 2013),* PP 77&80 e&ISSN: 2279&0837, p77&80, ISSN: 2279&0845.
7. *மின்சாரா, ஜே.எஃப். மசாஹிர், எஸ்.எம்.எம். (2015) முஸ்லிம் குழந்தைகள் மத்தியில் தென்னிந்திய சினிமா ஏற்படுத்திய தாக்கங்கள்: எலமல்பொத்தே பகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.* இலங்கையின் தென்கிழக்கு பல்கலைக்கழகம்: *இரண்டாவது சர்வதேச கருத்தரங்கு, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம்.*
8. *பட்டி எம். வால்கென்பர்க் ஜெசிகா டெய்லர் பியோட்ரோவ்ஸ்கி. (2017). ஊடகங்கள் இளைஞர்களை எப்படி ஈர்க்கின்றன மற்றும் பாதிக்கின்றன. யேல் யுனிவர்சிட்டி பிரஸ்: நியூ ஹேவன் மற்றும் லண்டன்.*
9. *ஸ்மிதிக்ராய், சுச்சாய் லாங்தாங், நதாவத் பீஜ்செல், சாட்விபூன். (2015)*

பல்கலைக்கழக மாணவர்களின் தனிப்பட்ட பொறுப்பை மேம்படுத்த திரைப்படங்களைப் பயன்படுத்துவதன் விளைவு. *ஆசிய சமூக அறிவியல்.* 11(5). 10.5539/ass.v11n5p1.

10. சுஜப், கே.எஸ்.எம். *(2013)* சினிமா தேவை: *ஒரு விமர்சனம்.* http://:www.kayalpatnam/ columns.asp?id=11.

11. டாம், எலைன் டபிள்யூ. *(2014).* திரைப்படக் கலாச்சாரத்தில் சமூகக் கட்டமைப்புகள்: நிகழ்ச்சிக் கலைகளில் அதன் விளைவு மற்றும் அர்த்தத்தை மேம்படுத்துவதற்கான அடையாளங்களின் அழிக்கப்பட்ட சங்கம். பல்கலைக் கழகம் கௌரவிக்கும் ஆய்வறிக்கைகள். போர்ட்லேண்ட் *மாநில பல்கலைக்கழகம். தாள் 71.*